இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 12 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 06 – வெள்ளிக்கிழமை 22 ஆகஸ்ட் 2025 – வெளியீர் 12 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 12 : Thiruvalluvar Year - 2056 - Aavani 06 - Friday 22 August 2025 - Dak 12+12 Pages ₹ 5.00

## தம்முடைய இறுதி மூச்சுவரை கழகக் காவலராக இருந்தவர் அண்ணன் இரகுமான்கான்! ஒன்றிய அரசு

# நாட்டை சர்வாதிகாரத்தை நோக்கி நகர்த்த புலனாய்வு அமைப்புகளைப் பயன்படுத்துகிறது!

## முன்னாள் அமைச்சர் அ.இரகுமான்கான் நூல்கள் வெளியீட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஆக. 22-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (21.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் அ.இரகுமான்கான் அவர்கள் எழுதிய நூல்களை வெளியிட்டு உரையாற்றுகையில், “தம்முடைய இறுதி மூச்சுவரை கழகக் காவலராக இருந்தவர் அண்ணன் இரகுமான்கான் அவர்கள்” என்று புகழாரம் சூட்டினார்.**

**மேலும் தமது உரையில் முதல்வர் அவர்கள், “ஒன்றிய அரசு நாட்டை சர்வாதிகாரத்தை நோக்கி நகர்த்த புலனாய்வு அமைப்புகளைப் பயன்படுத்துகிறது!” என்று குற்றம் சாட்டினார்.**

**இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

தந்தைக்குப் புகழ் சேர்க்கக்கூடிய தனயனாக, நம்முடைய அருமை அண்ணன் ரகுமான்கான் அவர்களுடைய நூல் வெளியீட்டு விழாவை, அவருடைய பெருமைகளைப் போற்றக்கூடிய பெருவிழாவாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அருமைத் தம்பி டாக்டர் சுபேர்கான் அவர்களுக்கு முதலில் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மக்களிடத்தில் இரகுமான்கான் பெற்றிருந்த அன்பு, பாசத்திற்குச் சான்று!

இரகுமான்கான் அவர்களின் சிறப்பைப் பற்றி ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால், அவர் கம்பத்தில் பிறந்தவர் – அந்த கம்பம் தொகுதியில் இருக்கக்கூடிய தோழர்களை நான் பார்க்கிறேன் இராமநாதபுரத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியவர் – அந்த தொகுதியில் இருந்து வந்திருக்கக்கூடிய உங்களையும் நான் பார்க்கிறேன் – அதேபோல, சேப்பாக்கத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் – அந்தத் தொகுதியில் இருந்து வந்திருக்கக்கூடிய உங்களையும் நான் பார்க்கிறேன். அவரைப் பொறுத்தவரைக்கும், தொகுதி மக்களிடத்தில் எந்த அளவுக்கு அன்பை, பாசத்தைப் பெற்றிருக்கிறார் என்பதற்கு இந்த நிகழ்ச்சியே ஒரு சான்றாக அமைந்திருக்கிறது.

தந்தையின் சிறப்பும் புகழும் அறிவும் ஆற்றலும் காலங்கள் கடந்தும் நிலைத்து நிற்கவேண்டும் என்று அவரால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய ஆறு நூல்களை அன்போடு நம்முடைய சுபேர்கான் கொண்டு வந்திருக்கிறார். அதை நான் மிகுந்த பாசத்தோடும், பெருமையோடும், பூரிப்போடும், மகிழ்ச்சியோடும் புளகாங்கித உணர்வோடு நான் வெளியிட்டேன்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.8.2025) சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் ரகுமான்கான் அவர்கள் எழுதிய நியாயங்களின் பயணம், மௌனமாய் உறங்கும் பனித்துளிகள், உலகமறியா தாஜ்மஹால்கள், பூ...பூக்கும் இலையுதிர் காலம், வானம் பார்க்காத நட்சத்திரங்கள் மற்றும் சட்டமன்ற பேருரைகள் அடங்கிய ”இடி முழக்கம் ஆகிய நூல்களை வெளியிட்டு உரையாற்றினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நீதியரசர்கள், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான், ரியாஸ்கான் உள்ளிட்ட குடும்பத்தினர்கள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை ஜோ அருண், புத்தக பதிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சட்டமன்றத்தில் இடி முழக்கமாக முழங்கியவர்!

ஏனென்றால், நம்முடைய இரகுமான்கான் அவர்களுடைய பேச்சுக்கும் எழுத்துக்கும் ரசிகன் நான்! அவர் பேசுகின்ற கூட்டங்கள் என்றால், நான் விரும்பி பங்கேற்பதுண்டு. என்னைப் பொறுத்த வரைக்கும், அவர் ஒரு ஸ்டார்! ஸ்டார் பேச்சாளர்! சட்டமன்றப் பேச்சுக்கு ஒரு எடுத்துக்காட்டாக எவ்வளவோ விஷயங்களைச் சொல்லமுடியும். அவர் பேச்சு, சட்டமன்றத்தில் இடி முழக்கமாகவும், தமிழ்நாடு முழுவதும் வெடிமுழக்கமாகவும் எதிரொலிக்கும்!

1943ஆம் ஆண்டு தேனி மாவட்டம் – கம்பத்தில் பிறந்து, மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும், சென்னை சட்டக் கல்லூரியிலும் படித்த அண்ணன் ரகுமான்கான் அவர்கள், கழகத்தின் கருப்பு சிவப்பு கொடியை உயர்த்திப் பிடித்தவர்!

இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், முன்னாள் அமைச்சர் காளிமுத்து, கவிஞர் நா.காமராசன், பேராசிரியர் இராமசாமி ஆகியோருடன் இணைந்து, 1965ஆம் ஆண்டு மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டார். அப்போது, நம்முடைய பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் மற்றும் மறைந்த முரசொலி செல்வம் ஆகியோருடன் நெருக்கமாகப் பழகி, கழகத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டவர். இன்றைக்குக்கூட நம்முடைய துரைமுருகன் அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்க வேண்டும் – அவருடைய உடல்நலம் சரியில்லாத காரணத்தால் அவரால் வர முடியவில்லை.

### தலைவர் கலைஞரால் அரவணைத்து வளர்த்து விடப்பட்டவர்!

தலைவர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரைக்கும், ஒரு திறமைசாலியை அடையாளம் கண்டார் என்றால், அவர்களை அரவணைத்து வளர்த்துவிடுவார். அப்படித்தான்,

> **“நம்முடைய இரகுமான்கான் அவர்களுடைய பேச்சுக்கும் எழுத்துக்கும் ரசிகன் நான்! அவர் பேசுகின்ற கூட்டங்கள் என்றால், நான் விரும்பி பங்கேற்பதுண்டு. என்னைப் பொறுத்த வரைக்கும், அவர் ஒரு ஸ்டார்! ஸ்டார் பேச்சாளர்! சட்டமன்றப் பேச்சுக்கு ஒரு எடுத்துக்காட்டாக எவ்வளவோ விஷயங்களைச் சொல்லமுடியும். அவர் பேச்சு, சட்டமன்றத்தில் இடி முழக்கமாகவும், தமிழ்நாடு முழுவதும் வெடிமுழக்கமாகவும் எதிரொலிக்கும்!”**

சட்டம் படித்த பிறகு, சொந்த ஊரில், வழக்கறிஞர் தொழில் செய்ய நினைத்த நம்முடைய ரகுமான்கான் அவர்களை, தலைவர் கலைஞர் அவர்கள், “நீ சென்னையில் வந்து Practice செய்” என்று சொல்லி அழைத்தார். அந்தப் பணியினை அவர் நிறைவேற்றினார். பிறகு மின்சார வாரியம், சென்னை மாநகராட்சி, பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றுக்கு, அண்ணன் ரகுமான்கான் அவர்களைத்தான் வழக்கறிஞராக நியமித்தார். தனக்குக் கிடைத்த வாய்ப்புகளில் எல்லாம் அவர் திறமையாகச் செயல்பட்டதால், தலைவர் கலைஞருடன் அன்பை மட்டுமல்ல; மக்களுடைய நம்பிக்கையையும் பெற்றார்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

## குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல்

# ‘இந்தியா’ கூட்டணி சார்பில் சுதர்சன் ரெட்டி வேட்பு மனுத்தாக்கல் !

*புதுடெல்லி, ஆக.22-*

*குடியரசுத்துணைத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் இந்தியா கூட்டணி வேட்பாளர் சுதர்சன் ரெட்டி வேட்புமனு தாக்கல் செய்தார்.*

*குடியரசு துணைத் தலைவராக இருந்த ஜகதீப் தன்கர், 2 ஆண்டுகளுக்கு முன்னதாகவே கடந்த ஜூலை 21ல் திடீரென ராஜினாமா செய்தார். இதனையடுத்து, குடியரசுத் துணைத்தலைவர் பதவிக்கான தேர்தல் செப்டம்பர் 9ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கு போட்டியிடும் இந்தியா கூட்டணி வேட்பாளர் சுதர்சன் ரெட்டி, வேட்புமனு தாக்கல் செய்தார்.*



*இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் முன்னிலையில், தேர்தல் நடத்தும் அதிகாரியான நாடாளுமன்றச் செயலாளரிடம் சுதர்சன் ரெட்டி வேட்புமனுவை தாக்கல் செய்தார். அவரது வேட்பு மனுவில் சோனியா காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, திருச்சி சிவா உள்ளிட்ட எம்.பி.க்கள் முன்மொழிந்து கையெழுத்திட்டனர்.*

*இதனிடையே, நாடாளுமன்ற ஜனநாயகத்தின் உயர்ந்த மரபுகளைப் பாதுகாக்கும் பொறுப்பில் பாரபட்சமின்றி செயல்படுவேன் என சுதர்சன் ரெட்டி உறுதியளித்துள்ளார். அரசியலமைப்பின் மீதும், மக்கள் மீதும் உள்ள நம்பிக்கையுடன் இந்தப் பயணத்தைத் தொடங்குவதாகக் குறிப்பிட்டுள்ள சுதர்சன் ரெட்டி, நமது ஜனநாயக உணர்வு அனைவரையும் தொடர்ந்து வழிநடத்தட்டும் எனத் தெரிவித்துள்ளார்.*

---

## மாநில அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பும்

# மசோதாவுக்கு எவ்வளவு நாள் ஒப்புதல் வழங்காமல் வைத்திருக்க முடியும்?

## உச்சநீதிமன்றம் அடுக்கடுக்கான கேள்விகள் !

*புதுடெல்லி, ஆக.22-*

*மசோதாக்களுக்கு எவ்வளவு நாட்கள் ஒப்புதல் வழங்காமல் வைத்திருக்க முடியும்? என ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.*



*சட்ட மசோதாக்களை நிறுத்தி வைப்பது குறித்த உச்சநீதிமன்ற தீர்ப்பை சுட்டிக்காட்டி, குடியரசுத் தலைவர் மூலம் ஒன்றிய அரசு எழுப்பிய கேள்விகள் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. 2வது நாள் விசாரணையின்போது, மசோதாக்களை முதல் முறையாக ஒப்புதலுக்கு அனுப்பினால், அதை ஆளுநர் நிறுத்தி வைப்பதை ஏற்க முடியாது என தெரிவித்த உச்சநீதிமன்றம், அது சட்டமன்ற செயல்பாட்டுக்கு எதிரானது என கூறியது. இந்நிலையில், 3வது நாளாக நடைபெற்ற விசாரணையில்,*

*மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க அரசியலமைப்பில் காலக்கெடு இல்லை என்றால் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கு ஒரு செயல்முறையை வகுக்க வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.*

*மசோதா எப்படி செயல்வடிவம் பெறாமல் இருக்க முடியும்? எவ்வளவு நாட்களுக்கு முடிவில்லாமல் வைத்திருக்க முடியும்? என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். ஆளுநரின் செயல்படாத தன்மைக்கு எதிராக மாநில அரசுகள் நீதிமன்றத்தை அணுகினால் நீதிமன்றம் ஆய்வு செய்யாமல் இருக்க முடியுமா? என வினவிய நீதிபதிகள், தவறு நடந்திருந்தால் தீர்வு காணப்பட வேண்டும் என்று தெரிவித்தனர்.*

*அரசியலமைப்பு பணியாளர்கள் சரியான காரணமில்லாமல் செயல்படாமல் இருந்தால் நீதிமன்றங்களுக்கு தலையிட அதிகாரம் இல்லையா? நீதிமன்றங்களின் கைகள் கட்டப்பட்டுள்ளது என்று கூறமுடியுமா? என அடுக்கடுக்காக கேள்வி எழுப்பியுள்ள நீதிபதிகள், உச்சநீதிமன்றம் அரசியலமைப்பின் ஒரு அங்கம் என்றும், அரசியலமைப்பின் பாதுகாலவர் எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.*